கற்பது விஞ்ஞானம், கணிப்பது சோதிடமா?

Phone No. 4502 | Regd. No. M. 5458

விலை அணு ஒன்று] | [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. — MALAI MANI

(திராவிட தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (19—12—49) ❀ வெளியூர் (20—12—49) [இதழ் 120

"சுபவேளை"யில் சுதந்திரம் பெற்ற பர்மாவைப் பாருங்கள்!

பகுத்தறிவைப் பரப்ப பலமான பிரசாரம் தேவை

:0:

அறிவுப்பணி ஆக்கத்துக்கு நல்லிளைஞர் திரண்டு வருக!

பகுத்தறிவாளர் மாநாட்டில் சர். ரகுநாத் பராஞ்சிபே

பகுத்தறிவு வாதம் எவ்வளவுதான் வேகமாகப் பரவிவந்தபோதிலும், விஞ்ஞானக் கல்வி கற்றவர்களிடையேயும், நாகரிகமடைந்த மக்கள் எனக் கருதப்படுவோரிடத்தும் மாயாவாதம் மாந்திரீகம் போன்ற மூடநம்பிக்கைகள் குடிகொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது பகுத்தறிவு வாதம் பயன் தருமா என்று கூட ஐயப்பட வேண்டியிருக்கிறது.

இளைஞர்களுக்குப் பகுத்தறிவுப் போதனை செய்வதன் மூலமே மூடநம்பிக்கைகள் வளர்வதைத் தடைசெய்ய முடியும். ஆகவே இளைஞர்களுக்குப் பகுத்தறிவு புகட்ட வேண்டிய மகத்தான பொறுப்பு கற்றவர்களைச் சேர்ந்தது. கற்றவர்கள் இந்தப் பொறுப்பைத் தட்டிக்கழித்தால் இளைஞர்கள் மூட நம்பிக்கைகளுக்கு ஆளாவதிலிருந்து காப்பாற்றப்படுவது பிற்காலத்தில் கஷ்டமாகி விடும்.

18—12—49ல் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்தி பகுத்தறிவாளர் முதல் மாநாட்டில் தலைமைவகித்துப் பேசிய சர். ரகுநாத் பி. பராஞ்சிபே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது.—

கடந்த அரை நூற்றாண்டு அனுபவத்தில் இந்நாட்டில் நான் கண்டது யாதெனில், நம்நாட்டு மக்கள் பலதுறைகளிலும் அல்லற்படுவதற்கு அடிப்படைக் காரணமாயிருப்பது பகுத்தறிவுக் கண் கொண்டு எதையும் பாராமையே என்பதாகும்.

இளைஞர்கள் பெரும்பாலும் பகுத்தறிவு வாதத்தை மேற்கொண்டிருக்கும் இந்நாளில், முதியோர்கள் ஆத்மீக வாதத்தில் ஈடுபடுகிறார்கள். இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. வயதில் முதியோர் அறிவுத்துறையில் மாறுதலடையத் தேவையேயில்லை; நான் இளமை முதல் இன்று வரை ஒரு பகுத்தறிவு வாதியாகவே இருந்துவருகிறேன்.

இந்தக் காலத்தில் பகுத்தறிவு எங்கும் பரவிவிட்டது. எனவே பகுத்தறிவுக்கென பிரசாரம் தேவையில்லையென சிலர் பேசுகின்றனர் இப்படிப் பேசுபவர்கள் உலகில் தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதையே அறியாதவர்களாவர். பகுத்தறிவு எவ்வளவுதான் வளர்ச்சியடைந்த போதிலும், மூடநம்பிக்கை இன்னமும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டு தானிருக்கிறது. நாம் இவ்விஷயத்தில் விழிப்பாக இல்லாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும். மனித உள்ளம் எளிதில் மூடநம்பிக்கையில் ஆழ்ந்துவிடும் தன்மை வாய்ந்தது. எனவே பகுத்தறிவாளர்கள், மூடநம்பிக்கைகளை முறியடிக்கும் முயற்சியில் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும்.

பகுத்தறிவு வாதம் வேகமாக வளர்ந்து வருகிறது என்று நான் சொன்னபோதிலும் மாயாவாதம், மாந்திரீகம் போன்ற மூடநம்பிக்கைகள் விஞ்ஞான கல்வி கற்றவர்களிடமும் காணப்படுகிறது. இதைக் காணும்போது பகுத்தறிவு வாதம் பயன் அளிப்பது எங்ஙனம் என்ற ஐயப்பாடும் தோன்றுகிறது.

எங்கு பார்த்தாலும் குருக்களும் சாமிகளும், அவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றும் படித்தவர்களும், பெரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இருந்து கொண்டு தானிருக்கின்றனர். நம் நாட்டுப் பத்திரிகைகள் மந்திரம், மாந்திரீகம் போன்ற விஷயங்களுக்குப் பிரமாதமாக விளம்பரம் கொடுத்து வருகின்றன. 'மந்திர சக்தியினாலும்' மாந்திரீகத்தினாலும் தாம் மேற்கொள்ளும் காரியங்களில் வெற்றி காணலாம் என்று நினைக்கும் மக்கள் இருந்து கொண்டுதானிருக்கின்றனர். மாந்திரீக சக்தியினால் பரீட்சையில் தேறிவிடலாம் என்று நினைக்கும் மாணவர்களும் இருக்கின்றனர்.

விஞ்ஞானக் கல்வி கற்றவர்கள் கூட, ஜோதிடம், ரேகை சாஸ்திரம் முதலியவற்றில் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஜாதகப் பொருத்தம் பார்த்துக் கூட பல திருமணங்கள் நேர்மாறான பலனைக் கொடுத்திருக்கின்றன. அப்படியிருந்தும் ஜோதிடத்திடம் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அரிய பெரிய காரியங்களில் ஈடுபடுவோர் கூட

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

சென்னையில் டாக்டர் பராஞ்சிபே

ரயிலடியில் சிறப்பான வரவேற்பு

தி. மு. கழகச் சார்பில் தோழர் அண்ணாத்துரை மாலை சூட்டி வரவேற்றார்

சென்னையில் நடைபெறும் அகில இந்திய பகுத்தறிவாளர் மாநாட்டின் தலைவரான டாக்டர் பராஞ்சிபே அவர்கள் 16—12—49 இரவு 7-45 மணிக்கு, பம்பாய் எக்ஸ்பிரசில் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வந்திறங்கினார்.

அவரை வரவேற்க மாநாட்டு நிர்வாகிகளும், தோழர்கள் எஸ். ராமநாதன், வர்கீஸ், (கேரள பகுத்தறிவியக்க சங்கப் பிரதிநிதி) ராமபட், மாயவரம் எஸ். சுப்பாதம், லாரண்ட், எஸ். கே. ஜ், சி. என். அண்ணாத்துரை, என். வி. நடராசன், சேலம் ஏ. சித்தையன், கே. எம். கண்ணபிரான், டி. எஸ். செல்வராஜ், வழக்கறிஞர் பக்தவத்சலம் ஆகியோரும் மற்றும் பொது மக்களும் வந்திருந்தனர்.

டாக்டர் பராஞ்சிபே ரயில் விட்டிறங்கியதும் முதன் முதலாக வரவேற்புக் குழுவினர் சார்பில் தோழர் எஸ். ராமநாதன் மலர்மாலை அணிவித்தார்.

அடுத்தபடியாக திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்களும், தொடர்ந்து மற்றும் பல திராவிட கழகத்தினரும் மலர் மாலைகள் அணிவித்தனர்.

பின்னர், தோழர் ராமநாதன் அவர்கள், டாக்டர் பராஞ்சிப்பேக்கு வந்திருந்த முக்கியஸ்தர்களை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்திவைத்து வைக்க, டாக்டர் அவர்கள், அனைவரிடமும் கைகுலுக்கி மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, மாநாட்டுத் தலைவர் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு, ஏற்கனவே வசதி செய்யப்பட்டுள்ள ஜாகைக்கு காரில் புறப்பட்டுச் சென்றார்.

(ந-நி)

ரஷ்யா-சீனா நல்லுறவு உடன்படிக்கை

லண்டன், டிச. 18 —

சீனகம்யூனிஸ்டு சர்க்கார் மாசேதுங்கின் மாஸ்கோ வருகையின் பலனாக ரஷ்யா—சீனா நல்லுறவு உடன்படிக்கை சீக்கிரமே கையெழுத்தாகும் என்று தெரிகிறது. மாலடோவ் அவரை வரவேற்றிருப்பதிலிருந்து, கீழககோடி விவகாரங்களுக்கு அவர்தான் அதிபதியாக இருக்க வேண்டும் என்று, இங்கே சொல்லப்படுகிறது.

மலான் ஆட்சியின் தொழிற் சங்க நீதி

பிரிட்டோரியா, டிச. 18 —

தென்னாப்பிரிக்கா தொழிற்சங்கங்கள் இணைப்பு கௌன்சில் தலைவர் ஜே. ஏ. ...ரூ, அக்கௌன்சில் கொள்கையை விளக்குகையில், வெள்ளையரல்லாதவரை ஆட்சியாளர், திறமையற்ற தொழிலாளர் கூலியை நிர்ணயிப்பது இவைகளே என்று கூறினார்.

ஐரோப்பிய (வெள்ளைத்தோல்) தொழிலாளர்களுக்கு ஒரு நாள் கூலி 11 ஷில்லிங்கும், கறுப்புத்தோல் உள்ள தொழிலாளர்களுக்கு 7 ஷில்லிங் 6 பென்ஸ் கூலியும், ஆப்பிரிக்கர்களுக்கு 5 ஷில்லிங் கூலியும், கொடுக்கப்பட வேண்டும் என்று, இந்த படைவெடுப்பு பிரிவின் காரணமாகவே இவர்கள் வெளியேற்றி வருவதாகவும், இப்பிரதேசங்களில் விசேஷ ராணுவ முஸ்தீபு ஏன் என்பதையும் காணும் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

சீனாவின் விடுதலை முயற்சிக்கு சோவியத் மக்களின் தளரா உதவி

பொதுவுடைமை மாஸ்கோவில் போராட்ட வீரர் மாசேதுங்

தளபதி ஸ்டாலின் வரவேற்றுப் பேசினார்

சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் மாசேதுங் டிச. 16-ந் தேதியன்று மாஸ்கோவுக்கு வருகை தந்தார். மாஸ்கோ சென்றடைந்தவுடனடியாக மார்ஷல் ஸ்டாலின் அவரை வரவேற்றுப் பேசியிருந்தார். சோவியத் அயல் நாட்டு மந்திரி எம். விஷின்ஸ்கி பேச்சு வார்த்தையின் போதுகூட இருந்தார். உதவி பிரதமர் மலங்கோவ், மாலட்டோவ் முதலியோரும்கூட இருந்தனர்.

மாசேதுங் யரோஸ்லாவ்ல் ரயில்வே நிலையத்தில் வந்திறங்கியதும், சீனக் கம்யூனிஸ்டுகளும் ரஷ்யரும் நாட்டுப் பாடல் இசைத்து அவரை வரவேற்றனர். மாஸ்கோ துப்பாக்கிப் படையைச் சேர்ந்த வீரர்கள், அணிவகுத்து மரியாதை செய்தனர். ரயில்வே நிலைய முழுதும் சீன-சோவியத் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ரயில்வே நிலையத்தில் நடந்த வரவேற்பின் போது பேசிய மாசேதுங் சோவியத் யூனியனுடைய ஸ்டாலினுடையவும், சோவியத் சர்க்காருடையவும் இன்றிய மையாத முக்கிய வேலை தங்களது நேச உறவைப் பலப்படுத்திக் கொள்வதும், சமாதானத்துக்கான கிளர்ச்சியை முன்னின்று நடத்துவதுமே யாகுமென்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'சீன மக்களின் விடுதலைக்காக சோவியத் மக்களும், சோவியத் சர்க்காரும் ஆண்டு பலவாக பேருதவி புரிந்து வந்திருக்கின்றனர்.

'சோவியத் மக்களும், சர்க்காரும் அளித்துவந்த இத்தகு நேச உதவிகளை சீனமக்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள்."

நகரும் போலீஸ்ஸ்டேஷன்

லண்டன், டிச 18—

எஸெக்ஸ் கௌண்டி போலீசார் 1000 பவுன் செலவில், நகரும் போலீஸ் ஸ்டேஷன் ஒன்றை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கின்றனர். முக்கியபொதுக் கூட்டங்கள், ரேஸ்கள் முதலியவை நடக்கும்போது இந்த போலீஸ் ஸ்டேஷன் அந்த இடங்களுக்கு மாற்றப்படும்.

மாலை மணி

சென்னை 19—12—49 திங்கட்கிழமை

பரவட்டும், பகுத்தறிவு!

"சகலருக்கும் சரிசமவாய்ப் பளிக்கக் கூடிய ஜனநாயக ஆட்சியமைப்புக் கோட்பாட்டை, பகுத்தறிவுவாதிகள் அப்படியே ஏற்றுக்கொள்வர். இவ்வுலகில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளும், இன்பதுன்பங்களும் வேறெரு உலகில் களையப்படும், அல்லது, சரி செய்யப்படும், கோட்பாட்டில் அவர்களுக்கு நம்பிக்கைக் கிடையாது மனிதன் நலம் பெறவேண்டும், அவனது அறிவாற்றல்கள் பெருக வேண்டும்; அவையும் இவ்வுகில் இப்போதே நடந்தேற வேண்டுமென்பதே பகுத்தறிவு வாதிகளின் ஒரு பெரும் நோக்கமாகும். மக்களின் நிகழ் கால, எதிர்கால வாழ்வில் இறந்த காலத்தின் படிப்பை அவர்கள் வருட்புவதில்லை. இப்போதைக்குக் கனவில் கூடக் கருத முடியாத அத்துணைப் பெரும் அளவுக்கு மனிதன் உயர முடியும் தனது சக்தியைக்கொண்டு என்டதில், பகுத்தறிவாளர்களுக்குத் திடமான நம்பிக்கையுண்டு, விலங்கினங்களின்றும் மனிதனை வேறுபடுத்த சாதனமாயிருக்கும் பகுத்தறிவு தங்கு தடையின்றி வளர அனுமதிக்கப் படுமேயானல், பகுத்தறிவாளர்ன் இப்பெரு நோக்கு நின்ற வேறுமென பதில் சிறிதும் ஐயப்பாடு வேண்டியதில்லை."

ஞாயிறன்று சென்னை நகரில் நடைபெற்ற இந்தியப் பகுத்தறிவாளர் மாநாட்டில் தலைமை யேற்று சிறப்புரை நிகழ்த்திய தோழர் ரகுநாத் பி. பராஞ்சிபே அவர்களின் தலைமைச் சொற்பொழிவின் இறுதிக் கருத்து மணிகளை மேலே தந்துள்ளோம். முழுச் சொற்பொழிவின் விவரமும் வேறிடத்தில் தரப்பட்டுள்ளது. தகுதி மிக்கத் தலைவரின் தலைமைப் பேருரை மாபெரும் கருத்துக் கருவூலமாகவே திகழ்வதைக் கவனத்துடன் கேட்டும் படித்தும் தெளிந்தோர் நன்குணர்வர். எழுபது வயதை எட்டிப் பிடித்துவிட்ட பேரறிஞர் பராஞ்சிபே அவர்கள், பொதுவாக அரசியல் சமுதாய இயல், கல்வி இயல் உலகுக்கும், சிறப்பாக பகுத்தறிவு உலகுக்கும் புதியவரல்லர்; இவையனைத்திலும் பழகிப் பழகிப் பழமையான பேரறிவாளராவார். தேசியத் தலைவர்களெனப்படுவோரின 'தடபுடல்' ஆரவார ஆர்ப்பரிப்புகள், இன்னபிற ஏகபோக நடவடிக்கைகள் பலவற்றல் பல வகையில் மறைக்கப்பட்டு வந்திருக்கும் இப்பேரறிஞர், இவற்றையெல்லாம் முற்றிலும் விரும்பாதவரென்பதோடு, அண்மையில் ஆஸ்திரேலியாவில் இந்தியாவின் ஹைகமிஷனராகஇருந்து பணியாற்றித் திரும்பி யிருப்பவராவாரென்பதையும் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம்.

விஞ்ஞானக் கலையை வகைபடுத்தித் திறம்பட ஆய்ந்தவர்; கல்வித் துறையில் ஆராய்ச்சியும் நிர்வாக அனுபவமு மிக்கவர்; சர்க்கார் யந்திர ஆட்சி முறை தெரிந்தவர், படைப் பயிற்சித் திறந்தெரிந்தவர்; பற்பல துறைகளிலும் அழுத்தமான ஆழ்ந்த அனுபவம் படைத்தவராவார் நம் பகுத்தறிவாளர் மாநாட்டுத் தலைவர். 'The Crux of the Indian Problem' — 'இந்தியாவின் குறைபாடுகள்' என்ற தலைப்புடன் கூடிய அரியதொரு நூல் இன்றைய சீர்திருத்தத் திராவிடத்தின் ஒவ்வொரு வீட்டையும் துலக்கிவிடும் வழிகாட்டியாகும். சுயமரியாதைக் கோட்பாட்டின் வழி நடக்கும் திராவிட இயக்கத் தோழர் ஒவ்வொருவரும் பொன்னேபோல் பாராட்டிப் புரந்துவரும் புத்துலகக் கோட்பாட்டுத் தெளிவு நூலாகும் அது. அந்நூலை ஆக்கித்தந்த அரும்பெருங் கோட்பாட்டு அறிவாசிரியரே இன்று நம்மத்தியில் பகுத்தறிவாளர் மாநாட்டிற்சுத் தலைமையேற்று நல்ல பல கருத்துக்களை எடுத்துக்கூறியுள்ளார். தோழர் பராஞ்சிபே அவர்களின் கருத்துக் களஞ்சியத்தினுள் புகுமுன், தெவிட்டாத நல்லறிவை நாடி நிற்கும் திராவிடப் பெருங்குடி மக்களின் சார்பில், பகுத்தறிவு இயக்கத்தின் பல்லாண்டு சேவை காரணமாக, பயன் கனிந்து நிற்கும் திருந்திய திராவிடத்தின் சார்பில் பேரறிஞர் இவரை உவகையுளத்தோடு வரவேற்கிறோம்; இவர் தம் அறிவும் ஆற்றலும், தொண்டும் உழைப்பும் மேலும் பல்லாண்டு இடைவிடாதிருந்து வரவேண்டுமென விழைவுளத்தோடு வாழ்த்துரை கூறுகின்றோம். அடிமைப்பட்ட சமுதாயம் தலை நிமிர்ந்தெழுந்து நிற்க பகுத்தறிவு வளர்ச்சியொன்று மட்டுமே உரிய கருவி என்ற காரணத்தால்.

பகுத்தறிவுக்குத் தடை போடாதீர், அதனை வளரவிடுங்கள்; மனிதனை எந்த அளவுக்கு அது உயர்த்தி விடுகிறது என்பதைப் பின்பு பாருங்கள்; இப்போது கனவில் கூட நினைக்க முடியாத அளவில் பெருநிலையை எய்தி விடுவான் மனிதன் என்பதாகப் பிற்போக்குச் சக்திகளுக்கு அறைகூவல் விடுத்து திறம்பட முடிக்கப் பெற்றிருக்கிறது தலைமையுரை. இவ்வுலகில் எனக்கு இன்பத்தைச் சராத ஆண்டவன், மறுவலகில் மட்டும் தருவானென்று நம்ப எனக்கு என்ன உரிமையும், உறுதியுமிருக்கிறதென்று கேட்டார் அன்றொரு ஆங்கிலப் பெரும் புலவர். ஆம்; உண்மைதான! இவ்வுலகில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளும் இன்ப துன்பங்களும் மறுவலகில் சரி செய்யப்படுமென்பதில் சிறிதளவும் நம்பிக்கை யில்லாதோரிர், மானிட வர்க்கம் நலம் பெறவேண்டும், (இங்கேயே இப்போதே) அறிவுத்திறன் பெருகவேண்டுமென்ற கோட்பாடுடையோர்தான் பகுத்தறிவாளர் என்று தெற்றெனஎடுத்துக் காட்டியுள்ளார் பராஞ்சிபே.

பகுத்தறிவாளர்களின் பாராட்டுக்கும், அறிவு விழைவோரின் அன்பு-வரவேற்புக்கும் உரியதான பேரறிஞரின் தலைமையுரையில் பொதிந்துள்ள கருத்துக்கள் அக்கனையும், நாட்டு மக்களத்தனை பேருடையவும் உள்ளங்களிலும் இடம்பெற வேண்டியவையாகும். குறைபாடுகளை குறிப்பிடத்தக்க அளவில் எடுத்துக் காட்டி, இடித்துங் கடிந்தும் விளக்கி, என்ன வேண்டும், எது தேவையென்பதை ஆட்சியாளருள்ளிட்ட அனைவருக்கும் அறிவுரை பகர்ந்துள்ளார் பராஞ்சிபே. சோதிடப்புரட்டு, கைரேகை சாஸ்திர குட்டு, யாகம், பலி முதலியவற்றின் யோக்யதை, முதலாளித்துவ-யதேச்சாதிகார ஆணவம், ஜாதி-மத-நிறவெறிப் பித்தலாட்டம் பழைமைப்பிடிப்பால் உந்தப்பெற்ற குருட்டு மனப்பான்மை, வைதீகத்துக்கு வளைந்து கொடுக்கும் மௌடிகப் புத்தி இன்னபிறவற்றைத் தனித்தனியே எடுத்துக்கொண்டு, அறிவு-ஆராய்ச்சி அனுபவ உரை கல்லில் அவற்றைத் தீட்டி-பொய்மை வெளிப்படுத்தி - பகுத்தறிவுச் சிறப்பைப்பாங்குடன் மொழிந்துள்ளார்.

குருட்டு நம்பிக்கையும், மௌடிகமும் பரிதாபத்துக்குரிய மக்களை மட்டும் பீடித்திருக்கவில்லை, ஆட்சிக் கடிவாளத்தை ஏற்க வந்த அரசியலாரையும் பெருத்த அளவில் பற்றியிருக்கிறதென்பதை சிலபல எடுத்துக் காட்டுகளால் சித்தரித்து, சிந்தனையைக் கிளறிவிட்டார் பராஞ்சிபே. நள்ளிரவில் சோதிடர் கணித்த சுப வேளையில்தான் சுதந்திர பர்மாவின் ஆரம்ப விழா நடைபெற்றது; பர்மாவில் பின்னர் விளைந்து வரும் குழப்பம், கலவரம் இன்னபிறவற்றைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் பெற்றதாயில்லை அச்சுபவேளையென்று எள்ளி நகையாடி இடித்துக் காட்டியுள்ளார் பேரறிஞர். நமது சுயராஜ்யமும் நள்ளிரவில்- நல்ல வேளையில்-வந்த சுபராஜ்யந்தானென்பதையும், சோதிடம் செப்பிய புனித வேளையில் ஆட்சி பீடமேறிய இந்நாட்டுத் தலைவர்கள் இன்று வரை இன்பத்தைக் கானல் நீராகவே காட்டி வருகின்றனர் மக்களுக்கு என்பதையும் யாரும் மறைக்க முடியாது. தோழர் பராஞ்சிபே அதை மறைக்கவில்லை; உய்த்துணர்ந்துகொள்ளுமாறு நமக்கே விட்டு விட்டார்!

தலைமையுரையின் ஒவ்வொரு கருத்தும் நமது கவனத்தை ஈர்க்கவே செய்கிறதென்ற போதிலும், ஆட்சியாளர்க்கு அறிவுறுத்தும் வகையில் அவர் தந்துள்ள இரண்டொரு கருத்தை மட்டும் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறோம். உணவுப் பிரச்னை இன்றைய எரியும் பிரச்னையாக இருக்கிறது தங்களது முழு ஆற்றலையும் இதில் செலுத்தி, வெற்றி காண முயல்வதாக சர்க்கார் பறைசாற்றுகின்றனர். ஏதேதோ திட்டங்கள் தீட்டுகின்றனர்; என்னென்னவோ பேசுகின்றனர். "ஆனல் இதில் கூட அறிவும் பட்ட செயலைக் காணேமே" என்று மனம் நைகிறர் பராஞ்சிபே. உணவுப் பெருக்கம் தேவையென ஊர் ஊராகச் சுற்றி வரும் மந்திரிமார் பெருகிவரும் மக்கள் தொகை பற்றி தினைத்துணையும் அக்கரை காட்டவில்லையே யெனக் கவல்கிறர். உற்பத்தியும் பெருகி, பிறப்பு விகிதமும் பெருகிலை உணவு நெருக்கடி இன்று போல்தானே, இதைவிட கேவலமாகத்தானே என்று மிருக்குமென்ற சாதாரண அறிவு இவர்களுக்கில்லையேயென எடுத்துக்காட்டி மாற்றம் விழைகிறர் உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு செலவழிக்கும் சக்தியில் ஒரு பதியைப் பிறப்பு விகிதத்தைக் குறைக்கும் முயற்சிக்கு—கர்ப்பத் தடைமுறை பிரசாரத்துக்குப் பயன்படுத்துங்களெனப் பொறுப்புணர்ச்சியுடன் கேட்டுக் கொண்டுள்ளார் பேரறிஞர் பராஞ்சிபே

பகுத்தறிவாளர் மாநாட்டின் பெரும் பயனையும் தலைவர் பராஞ்சிபே அவர்களின் கருத்துக் களஞ்சியத்தையும் நாட்டவர்கள், குறிப்பாக நாடாள வந்தவர்கள், ஏற்றுத்திருந்த வழியேற்படுமென்ற பெரு நம்பிக்கையோடு இதனை இன்று முடிக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக் குழுக் கூட்டம்

தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம், 31—12—49 இரவு 8-மணிக்கு, திருச்சி, கருணாநிதி பார்க் கட்டிடத்தில் நடைபெறும். பொதுக் குழு உறுப்பினர்கள் வரக்கோருகிறேன்.

அண்ணாதுரை,
பொதுச் செயலாளர் தி. மு. கழகம்.

பல்லாயிரக் கணக்கில் பகுத்தறிவாளர்கள் கூடினர்

—(0)—

சென்னையில் பராஞ்சிபே தலைமையில் மாநாடு

சென்னை, டிச. 19—

நேற்றுகாலை 9-30-மணிக்கு சென்னை ராஜாஜி ஹாலில் அகிலஇந்திய பகுத்தறிவு மாநாடு டாக்டர் பராஞ்சிபே அவர்கள் தலைமையில் கூடியது. மாநாட்டுக்குப்பல் வேறு மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, காசா சுப்பராவ் எச். டி. ராஜா, டி. சண்முகம், பொன்னம்பலனர், வி. வி ராமசாமி, க. அன்பழகன், மதியழகன், கஜேந்திரன், டி. எம் பார்த்தசாரதி, வி பி. எஸ். மணியர், பேளுகுறிச்சி ஜி. சி. சோமசுந்தரம், க. கோவிந்தசாமி, எஸ் கருசாமி தேசிங், பராஞ்சிதம், சிதம்கர ஜ்ஞானதாழி அலமேலு அப்பாதுரை,எம். ஏ.; மற்றும் பலர் வந்திருந்தனர்.

மாநாடு சரியாக 9-30 மணிக்கு ஆரம்பமாயிற்று வரவேற்புக்குழுத் தலைவர் எஸ். ராமநாதன் அவர்கள் மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்று மநாடு கூடுவதின் அவசியத்தை விளக்கிப்பேசினர்.

பின்னர் தோழர் எச். டி. ராஜா டாக்டர் பராஞ்சிபே அவர்களைத் தலைமையேற்கும்படி கேட்டுக்கொண்டார் அதை ஆதரித்து தோழர் வி. வி. ராமசாமி, பேராசிரியர் பெரட்டோ அன்பழகன், ரங்காச்சாரி, பி. பாலசுப்ரமண்யம், வர்மா முதலியவர்கள் பேசினர்.

பின்னர் நீண்ட கைதட்டுதலுக்கிடையே டாக்டர் பராஞ்சிபே அவர்கள் தலைமை ஏற்று தமது முன்னுரையைப் ஆற்றி முடித்தார். பின்னர், அனைத்திந்திய பகுத்தறிவாளர் கழகம் என்பதை இம்மாநாடு ஏற்படுத்துகிறது. என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. இத்துடன் கலைந்து மாலை 6-15 மணிச்கு மறுபடியும் கூடுமென அறிவிக்கப்பட்டது.

அறிவுக் கதிர்!

மனிதன் இயல்பாக நல்லவன். கொடுங்கோன்மையினின்றும் பிழைகளினின்றும் அவன் விடுதலையடைந்தால், சரியாகவும் நியாயமாகவுமே நடந்து கொள்வான். இயற்கையாதொரு தடையுமின்றி தன் வேலையைச் செய்ய விட்டுவிட்டால் யாவும் நன்மையாகவே நடக்கும்

— பெந்தாம்

செஞ் சீனவுக்கு பர்மா அங்கீகாரம்

சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காருக்கு, பர்மா டிசம்பர் 13ந் தேதியன்று பர்மா அங்கீகாரம் நல்கிவிட்டது. சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காரை அங்கீகரிக்கும் கம்யூனிஸ்ட் சார்பற்ற முதல் நாடு பர்மாவேயாகும்.

தர்மபுரியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

—————(o)—————

தோழர் அண்ணாத்துரைக்கு பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

தர்மபுரி, டிச. 16—

தர்மபுரி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 15—12—49 அன்று, மிகச் சிறப்பான முறையில் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர். நகரின் பல பகுதிகளிலும், அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு, வரவேற்பு வாசகங்கள் பொறித்த அட்டைகளும், தோரணங்களும் அமைக்கப்பட்டிருந்தன. திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், கழகக் கொடிகளைத் தாங்கி சைகிள்களில் நகரெங்கும் வளம் வந்து ஆர்வத்துடன் பணி புரிந்தனர். தர்மபுரி பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள சேலம், கிருஷ்ணகிரி, ... புரம் ஆகிய பல ஊர்களிலிருந்தும் இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். கூட்டம், எலக்ட்ரிக் ஆபீஸ் எதிர் மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அலங்காரப் பந்தலும், மின்சார அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன.

தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, சித்தய்யன், அண்ணாதுரை, வி பி சாமி ஆகியோர், திருச்சியிலிருந்து வந்திருந்தனர்.

தர்மபுரி திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் குட்டியப்பன் அவர்கள் வீட்டில், பகல் விருந்தளிக்கப்பட்டது.

பிற்பகல் 2-30 மணிக்கு, தர்மபுரியை அடுத்துள்ள, பாப்பாரப்பட்டி எனும் சிற்றூரில், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற்றது. கழகச் சார்பாகவும், விவசாயிகள் சங்கச் சார்பாகவும் தோழர் அண்ணாத்துரைக்கு, வரவேற்பிதழ்கள் அளிக்கப்பட்டன.

தோழர் சித்தய்யன் அவர்கள் தலைமைவகித்து, கைத்தறி நெசவாளரின் நிலைமை பற்றியும், இன்றைய சர்க்காரின் அக்கறையற்ற போக்கையும் விளக்கிப் பேசினார். தோழர் அண்ணாத்துரை நெசவாளி விவசாயி இருவருமே அடைந்துள்ள இன்னலை விளக்கி, அவர்களின் இன்னலை தீர்க்க தக்க திட்டம் தேவை என்பதைக் கூறி, தி. மு. கழகம், சமதர்ம நோக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டு பணிபுரியும் என்று உறுதி கூறினார். செயலாளர் தோழர் நரசிமமன் நன்றி கூறிய பிறகு, கூட்டம் இனிது முடிந்தது.

பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

மாலை 4 மணிக்கு, தர்மபுரி பஞ்சாயத்து போர்டு கட்டடத்தில், தோழர் அண்ணாத்துரைக்கு, பஞ்சாயத்து போர்டார், விருந்தளித்து வரவேற்பிதழ் வாசித்தளித்தனர். பஞ்சாயத்து போர்டு துணைத் தலைவர் தோழர் ஐயம்பெருமாள் தலைமை தாங்கினார். பஞ்சாயத்து போர்டாரின் உபசரிப்புக்கும் வரவேற்புக்கும் அண்ணாத்துரை நன்றி கூறிவிட்டு, இத்தகைய ஆட்சி அலுவலங்கள் மூலம், மக்களாட்சிக்கான மாண்புகளை எவ்வகையில் பெறலாம் என்பதைப் பற்றிப் பேசினார். கூட்டம் முடிந்த பிறகு, பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்களுடன் புகைப்படம் எடுக்கப்பட்டது.

பொதுக்கூட்டம்

மாலை 6 மணிக்கு, தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமை வகித்தார். தோழர் சித்தையன் திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது என்பது பற்றி விளக்கியதுடன், தற்கால அரசியல் நிலைமைபற்றிப் பேசினார். பிறகு, தோழர் அண்ணாத்துரை, புதிய அரசியல் திட்டத்தைப் பற்றியும், பகுத்தறிவின் அவசியத்தைப் பற்றியும் விளக்கிப் பேசினார். தோழர் குட்டியப்பன் நன்றி கூறினார். கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர். தாய்மார்கள் திரளாக வந்திருந்தனர்.

இரவு, தோழர் குட்டியப்பன் அவர்கள் வீட்டில் விருந்தளிக்கப்பட்டது. (ந. வி)

தென்னிந்திய ரயில்வேயின் வருமானம்

1948-49ல் ரூ. 8 கோடி

தென்னிந்திய ரயில்வேயின் 1948-49ம் 'ஆண்டில்' பிரயாணம் செய்தவர்கள் 144 000,000 பேர்கள் என்வும், சராசரி ஒரு ஆளுக்கு 4000 00 பிரயாணம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதனால் தென்னிந்திய ரயில்வேக்கு ரூ. 78,000,000 வருமானமென்றும், சராசரி ஒரு நாளுக்கு ரூ 200 000 என்றும் தெரிய வருகிறது.

பதினொன்று கோடி பிரயாணிகள் 3248000 000 மைல்கள் ("பிரயாணிகள் மைல்கள்) பிரயாணம் செய்ததாகவும், ஒரு பிரயாணியிடமிருந்து ஒரு மைலுக்கு ... காலணா சம்பிரகன ... இரயில்வே வருமானம் பெற்றுள்ளன.

இரா வகுப்பு பிரயாணிகளைக் காட்டிலும் மூன்றாம் வகுப்பினரே அதிக மைல்கள் பிரயாணம் செய்திருக்கின்றனர். இவர்கள் 14 கோடி மைல்கள் பிரயாணம் செய்திருப்பதாக தெரிகிறது.

சென்ற அக்டோபரில் பொன்மலை இரயில்வே தோட்டத்தில் 5,000 பவுண்டுகள் இளை காய்கறி வகைகளும் உற்பத்தி செய்து, காலனியில் இருப்போருக்கு சரசமான விலையில் விற்பனை செய்யப்பட்டது. இத்துடன் கால்நடை வளர்ப்புப் பண்ணையில் 2,650 பவுண்டு பசும்பாலும் உற்பத்தி செய்து, காலனியிலிருப்போருக்கு விற்பனை செய்யப்பட்டது.

—————

மு கருணாநிதி படிப்பகம் திறப்பு விழா

சோழகர் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் நிறுவப்பட்ட மு. கருணாநிதி படிப்பகத்தை நவ. 4-ந்தேதி தோழர் பி. எஸ். இளங்கோ திறந்து வைத்து நீண்ட சொற்பொழிவாற்றினர்.

(வி-உ)

ஸ்டர்லிங் கடனைத் தீர்ப்பதில் பிரிட்டனுக்கு யு. எஸ். யோசனை

இந்தியா, எகிப்து முதலிய நாடுகளுக்கு பிரிட்டன் தர வேண்டிய ஸ்டர்லிங் கடனை தீர்ப்பதில் யுனைடெட் ஸ்டேட்ஸ் பண உதவி செய்ய வேண்டும் என்று, சில அமெரிக்க மூலதனக்காரர்கள் தெரிவித்த யோசனை குறித்து இங்கு சிரத்தை காட்டப்படுகிறது. இது விஷயமாக எதுவும் உத்தியோகபூர்வமாக ஒயிட் ஹாலுக்கு கிடைக்கவில்லை என்றும், ஆகவே இதுபற்றி எதுவும் சொல்வதற்கில்லையென்றும் 'ஒயிட் ஹால்' வட்டாரங்களில் கூறப்படுகிறது.

நியூயார்க் டைம்ஸும், வால்ஸ்ட்ரீட் ஜர்னலும் இந்தயோசனையை ஆதரித்து எழுதியிருக்கின்றன. இந்த யோசனை வாஷிங்டனில் சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நியூயார்க் நிதி வட்டாரங்களில் கூறப்படுகின்றன.

ஸ்டர்லிங் கடன் ஒழுங்கு முறையாது என்றும், இது விஷயமான பேச்சு வார்த்தைகள் யுனைடெட் ஸ்டேட்ஸ் கனடாவுடன் நடத்தப்பட்டு வருகிறது என்று சர் கிரிப்ஸ் சென்ற வாரம் தெரிவித்திருந்தது நினைவிருக்கும்.

டர்பன் நகர சபையின் நிறவெறிக் கொள்கை

டர்பன் முனிசிபல் கௌன்சில் தான் நடத்திவரும் புத்தகசாலையை வெள்ளையரல்லாதவர் உபயோகிக்கக் கூடாது என்ற தடையை அமுல் நடத்திவருகிறது.

இத்தடையை நீக்கி எல்லா மக்களும் நிற வித்யாசமின்றி அந்த வாசகசாலையை உபயோகிக்க அனுமதிக்கும்படி நேட்டால் இந்தியர் காங்கிரஸ் கோரியிருக்கிறது.

இக் காங்கிரசின் கௌரவக் காரியதரிசியான தேசாயின் டர்பன் அவையில் மேயருக்கு எழுதியுள்ள கடிதத்தில், இம்மாதிரி தடை இருப்பது அநீதியுமானதென்றும் ஜனவரி 16-ந் தேதிக்குள் இத்தடை நீக்கப்படாவிட்டால் இந்தப்புத்தகசாலையை உபயோகிப்பதை தவிர்க்க முடியாது என்று இந்திய மக்களுக்கு காங்கிரஸ் தெரிவித்துவிடும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

—————

"பயர்பர்ட்"-புது ராடர் கருவி

சுணுக்கணுங்களை ஏற்றிவரும் எதிரி விமானங்களைக்கண்டு பிடித்து வழியிலேயே தாக்க "பயர்பர்ட்" என்று புது கருவி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு வருகிறது.

பத்து அடிநீளமுள்ள இந்த ராக்கெட்டில் ராடர் 'கண்'ணும் எலக்டிரானிக் 'மூளை'யும் பொருத்தப்பட்டிருக்கிறதாம். இதை ஒரு விமானத்திலிருந்தே பிரயோகிக்க முடியுமாம், ராக்கெட்டுகள் அபிவிருத்தியில் ரஷ்யாவும் விசேஷ சிரத்தை காட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

—————

இந்தோனேஷிய ஐக்கிய நாடுகள்

—————

புதிய அரசியல் கையெழுத்திடப் பெற்றது

இந்தோனேஷிய ஐக்கிய நாடுகளின் புதிய அரசியல் பட்டேவியாவில் டிசம்பர் 14-ந் தேதியன்று இரவு கையெழுத்திடப்பெற்றது. இப்படிக் கையெழுத்தாகிவிட்டதால், டிசம்பர் 22-ந் தேதியன்று ஹேக், ஜோக்ஜகார்த்தா, பட்டேவியா ஆகிய இடங்களில் ஒரேகாலத்தில் இந்தோனேஷியாவின் ஆதிபத்தியம் பிரகடனம் சுமுகமாக நிறைவேறுமெனக்கருதப்படுகிறது.

கொள்முதல் செய்வோரை நியமிக்கும் பிரச்னை

கலெக்டர்களுக்கு சர்க்கார் சுற்றறிக்கை

சென்னை, டிச. 17—

கொள்முதல் ஏஜெண்டுகளை நியமிக்கும்பொழுது 1942க்கு முன் வியாபாரத்தில் இருப்பவர்கள் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென்றும், வியாபாரத்தை நடத்தபோதுமான பணமுள்ளவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு சுற்றறிக்கையில் மாகாணத்திலுள்ள எல்லா கலெக்டர்களுக்கும் சர்க்கார் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

போதிய மூலதனம் ஒரு ஏஜெண்டிடம் இல்லை என்றால், பணம் கொடுத்து வாங்கும் சக்தியுள்ள மற்றொரு லைசென்ஸி நியமிக்கப்படலாம் என்றும் ஒவ்வொரு கொள்முதல் பிரதேசத்திற்கும் குறைந்தது இரண்டு ஏஜெண்டுகளாவது இருக்க வேண்டுமென்றும் இவ்வுத்தரவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பெரிய வர்த்தகர்கள்தான் கொள்முதல் ஏஜெண்டுகளாக நியமிக்கப்படவேண்டும் என்பது அவசியமில்லை என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

அணுக்குண்டு உற்பத்தியில் 'அவர்களுக்கும்' ஊக்கம்!

அம்மான், டிச. 17—

அணுக்குண்டு, விஷக்கிருமிகள் இவைகளை உற்பத்திசெய்ய வழிகளைக் கண்டுபிடிக்கும்படி யூதர்கள் தங்கள் விஞ்ஞானிகளை உற்சாகப்படுத்தி வருவதாக பாலஸ்தீன அரபு பகுதிகளுக்குக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. சமீபகாலம் வரையில் அணுசக்தி அமெரிக்கக் கமிட்டி தலைவராக இருந்த ... லிலியன்தல் இஸ்ரேல் சர்க்கார் அழைத்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

—————

இலங்கையில் கூட்டுறவு இயக்கம்

கொழும்பு, டிச. 16—

உலகிலேயே இதுவரை நடைபெற்றிராத அளவுக்கு மாபெரும் கூட்டுறவு இயக்கக் கூட்டம் ஒன்று இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டின் போது நடைபெற இருக்கிறது. இதில் இலங்கையிலுள்ள சுமார் 6000 சங்கங்கள் பங்கெடுத்துக்கொள்ளும். கூட்டுறவு இயக்கம் எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்திருக்கிறது என்பதை இந்நாட்டு மந்திரிகள் நேரிலேயே இந்தக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இம்மாநாட்டை இலங்கைப் பிரதமர் ஆரம்பித்து வைப்பார்.

யூகோவைப் பிரிவினை செய்ய வேண்டுகிறதாம் ரஷ்யா

ஸ்விஸ் பத்திரிகை தரும் தகவல்

பாஸ்லே, டிச. 16—

யூகோஸ்லாவியாவை மேற்குப் பகுதி கிழக்குப் பகுதி என்று பிரித்துவிடவேண்டும் என்ற யோசனையை, ரஷ்ய திரைமறைவில் பிரிட்டனுக்குத் தெரிவித்து, யோசித்து வருவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன வென்று பாஸ்லேயிலுள்ள 'நாச்ரிசடென்' என்ற ஸ்விஸ் பத்திரிகை ஒரு செய்தியை பிரசுரித்திருக்கிறது.

—————

தகராறு ஆரம்பம்!

ரஷ்யாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் யுனைடெட் ஸ்டேட்ஸ் தன் அரசியல் உறவை அறுத்துக்கொள்வது பற்றி யோசித்து வருவதாக 'டெய்லி ஹெரால்ட்' ராஜதந்திர நிருபர் கூறுகிறார்:

இப்பொழுது வாஷிங்டனில் உதவி ராஜாங்க காரியதரிசி ஜேம்ஸ் வெப்புக்கும் பல்கேரிய ஸ்தானீகர் பீடர் வொலவுக்குமிடையே இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக அவர் கூறுகிறார்.

கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவுக்கெவ்வளவு பிளவை அதிகரிக்கச் செய்ய முடியுமோ அவ்வளவையும் ரஷ்யா செய்து வருகிறதென்று அவர் கூறுகிறார்.

—————

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் 'மாலைமணி'

லஞ்சத்தை ஒழிக்க இலங்கை முயற்சி

தன் அதிகாரிகளிடையே லஞ்ச வழக்கத்தை ஒழிக்க இலங்கை சர்க்கார் சட்டம்செய்ய தீர்மானித்திருக்கிறது. முனிசிபல் கௌன்சில், அர்பன் கௌன்ஸில், டவுன் கௌன்ஸில், கிராமக் கமிட்டி இவைகளின் மெம்பர்கள் லஞ்சம் வாங்குவது ருசுப்பிக்கப்பட்டால் 5 வருட காலத்திற்கு பிரஜாவுரிமை பறிக்கப்பட்டுவிடும் என்று இச் சட்டத்தில் ஷரத்துக்கள் சேர்க்கப்படும் என்று தெரிகிறது.

இலங்கை மந்திரிசபையில் லாகிரி வஸ்துக்களை உபயோகிக்காதவர்கள் இருந்தாலும் மதுவிலக்குக்கு முடிவு செய்யப்படுவது சந்தேகம் என்று தெரிகிறது. மதுவிலக்கினால் இலங்கையின் வருமானம் மிகவும் குறையும் என்றும் கள்ளத்தனமாக குடிப்பது அதிகரிக்கும் என்றும், ஆகவே மதுவிலக்குக்கு முடிவு செய்யப்படமாட்டாதென்றும் தெரிகிறது.

கள் மூலம் இலங்கை ரூ 45 000000 வருமானத்தை ஆண்டு தோறும் பெற்று வருகிறது.

—ரூனேப்

—————

மலேயாவுக்கு இலங்கை ஹைகமிஷனர்

மலேயாவில் இலங்கையின் முதல் ஹைகமிஷனராகத் தோழர் மாணிக்கம் சுவாமிமுத்து நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் டிச. 16-ல் இலங்கை கவர்னர் ஜெனரலைப் பேட்டி கண்டு ... மலேயாவில் ஏராள இலங்கைவாசிகள் இருப்பதால், அவர்களைக் கவனிக்க இந்த நியமனம் மூலமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

தி. மு. கழகக் கிளைகள்

—————:0:—————

தக்கோலம்—சிற்றூர்க்கிளை

தக்கோலம், டிச. 13—

7—12—49ல் தோழர் கே. ஆர். மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றகூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்—தக்கோலம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். ஜே. ராமசாமி, துணைச் செயலாளர்-கே. ஏ. முகம்மது ஆதம், பொருள் உறுப்பினர்-எல். எம். ஜலதாதன், விளம்பர உறுப்பினர்-பி. ஆர். ஜன். ஏனைய செயற்குழுவினர் வி. நாராயணன், எஸ். கே. சுப்பிரமணியம். எஸ். என். ராஜமாணிக்கம், எ. எஸ். திருவேங்கடம், வெ. சு. சீனிவாசன்.

(வி-உ)

• • •

பெரியம்பட்டி-சிற்றூர்க்கிளை

பெரியமபட்டி, டிச. 13—

இவ்வூர் திராவிடர்கழகச் செயற்குழுக் கூட்டம், 8-12-49-ல் தோழர் பூ. ப. அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, இத்திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்-பெரியமபட்டி சிற்றூர்க்கிளை" என்று மாற்றப்பட்டு, கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— பூ. ப. அண்ணாமலை; துணைச்செயலாளர்கள்:- பெ. மா. குப்புசாமி; பெ. சு. ராமகிருஷ்ணன்; பொருள் உறுப்பினர்: பெ. சு. கோவிந்தன்; விளம்பர உறுப்பினர்:-இரா. கஜேந்திரன். ஏனைய செயலுறுப்பினர்கள்:- பெ. சே. சென்னியப்பன், பெ. மா. சிதம்பரமன், செ. நா. பசுபதியப்பன், தி. இராமகிருஷ்ணன், பெ. சு. நாசப்பன்.

* * *

பொம்மிடி-சிற்றூர்க்கிளை

பொம்மிடி, டிச 13—

25—11—49ல் இவ்வூர் பாரஸ்வநாதஸ்வாமி சன்னதியில் கூடிய கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—பொம்மிடி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. எஸ். மணி; துணைச்செயலாளர்:-என. கே. குட்டி; பொருள் உறுப்பினர்:—வி. பி. வி. சலம்; ஏனைய செயற்குழுவினர்:— பி. ராஜூ, பி. ஆர். மாரிமுத்து, எஸ். மாரியப்பன், பி. லோகநாதன், எம். ரங்கநாதன், பி. சின்னசாமி.

(செ—ர்)

* * *

மாங்குப்பம்—சிற்றூர்க்கிளை

எல். மாங்குப்பம், டிச. 13—

ஆம்பூர் வட்டம், எல். மாங்குப்பம் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 9-12-49-ல் தோழர் பி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்-எல். மாங்குப்பம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-எம். விக்டர்தாமஸ், துணைச்செயலாளர்:-பி. ராஜகோபால்; நிதி உறுப்பினர்:-எம். வி. பெருமாள்; விளம்பர உறுப்பினர்:- எஸ். கே. லோகநாதன், ஏனைய செயற்குழுவினர் :— வி. மாணிக்கம், எம. என். மணி, எஸ். பெரியசாமி, எம். கே. பெரியசாமி, பி. அந்தோணி, எஸ். ஜார்ஜி, என், எஸ். கே, நாதன், எம. ஜி. சேகரன், பி. முத்து.

பின்பு, பொங்கல் திருநாளில் கொடியேற்று விழா நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டு, செயலாளர் நன்றிகூற, கூட்டம் முடிவுற்றது.

(செ ர்)

* * *

அகரம்சேரி—சிற்றூர்க்கிளை

அகரம் சேரி, டிச. 13—

வேலூர் தாலுகா, அகரம் சேரியில், 11-12-49ல் நடைபெற்ற கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்—அகரம் சேரி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—இராசமாணிக்கம், துணைச் செயலாளர்:—வி. எம. ராமசாமி, பொருள் உறுப்பினர்:— எம. குப்புசாமி, விளம்பர உறுப்பினர்:—பி. என். நாராயணசாமி, ஏனைய செயற்குழுவினர்:—பி. துரைசாமி, ஆர். பழனி, ஏ. பெருமாள், ஜி. துரைசாமி, எம். துரைசாமி.

* * *

அரங்கல் துருக்கம்-சிற்றூர்க்கிளை

அரங்கல்துருக்கம், டிச. 13—

ஆம்பூர் வட்டம், அரங்கல் துருக்கம் தி. மு. க. அமைப்புக்கூட்டம், 11 12 49 ல் தோழர் மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வூர் முக்கியஸ்தர்களும் 50 அனுதாபிகளும் வந்திருந்தனர். தோழர் ஐ. ப. கோவிந்தசாமி தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார். பின்பு, "திராவிட முன்னேற்றக் கழகம்-அரங்கல் துருக்கம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-இராமசாமி துணைச் செயலாளர்-குப்புசாமி, நிதி உறுப்பினர்-ஏ. எம. கோபாலன், விளம்பர உறுப்பினர்-எ-. ஜெயராமன். ஏனைய செயற்குழுவினர்:—எல ஆர். மணி, ஏ. சுப்பிரமணியர், ஜி. ராஜகோபால், மாணிக்கம், எல. பாலகிருஷ்ணன், எஸ். நீர்த்தகிரி, ஏ. கே. அப்பாசாமி, பி. மாணிக்கவேலன், ஏ. ஞானப்பிரகாசம், என. பெருமாசாமி, வி. முத்துசாமி, எல. சின்னராஜூ.

திருமணம்

குலூர், டிச. 5—

இவ்வூர் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் (அழகப்பன்) அவர்களுக்கும், தோழியர் செல்லம்மாள் அவர்களுக்கும் செட்டிக்காரர் மாளிகையதனில் 30-11-49 காலை 10 மணிக்கு வெகு சிறப்பாக திருமணம் நடந்தேறியது. மணமக்கள் மாலைகளை அணிந்து தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை கூறினார்கள். பல கழகங்கள் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும், வாழ்த்திதழ்கள் படித்தளிக்கப்பட்டன. ஏராளமான வெள்ளி-பாத்திரங்களும் பரிசுகளும் மணமக்களுக்கு வழங்கப்பட்டன.

தோழர்கள் பொள்ளாச்சி வெங்கடாசலம், குலூர் தோழர்கள் எஸ். பி. ரங்கசாமி, எஸ். ஏ. நாச்சிமுத்து, எஸ். என். அற்புதசாமி ஆகியோர் சீர்திருத்தத்திருமண சிறப்பு பற்றிப் பேசினர். பெரியார் ஈ. வெ. ரா. ஜி. டி. நாயுடு, மற்றும் பலர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர். மணமக்கள் நன்றி கூறவுடன் திருமணம் முடிவுற்றது.

கோவைமாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த சுமார் 1000-க்கு மேற்பட்டோருக்கு நல்ல முறையில் விருந்தளிக்கப்பட்டது. (இதன் நினைவாக ரூபாய் 5 வரப் பெற்றோம். நன்றி!

ஆ-ர்)

பெயரிடல்

குடியேற்றம், டிச. 10—

சந்தைப்பேட்டை தி. மு. க தோழர் தட்சிணாமூர்த்தி அவர்களின் பெண்மகவுக்கு தோழர் முத்துசாமி அவர்கள் தலைமையில் 6.12 49ல் "கலை மணி" எனப் பெயரிடப் பட்டது. தோழர்கள் துளசிராசு, வெங்கடேசன், ஜெகதீசன் ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர்.

இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

நில நடுக்கத்தையும் சமாளிக்கும் கலங்கரை விளக்கம்



பசிபிக் கடற்கரை நாட்டுப் பகுதியாகிய கலிபோர்னியாவில் லாங் பீச்சுக்கருகில் 1949 ஏப்ரல் 22-ல் ஏற்பட்ட புதிய கலங்கரை விளக்கத்தைப் படத்தில் காணலாம், நில நடுக்கங்களையும் காற்று—கடல் அலை சக்திகளையும் எதிர்த்து நிற்கக்கூடியதாம இவ் விளக்கு. யு. எஸ். கடற்கரைப் பாதுகாப்பு ஸ்தாபனத்தாருக்கு இதனைக் கட்டிமுடிக்க ஒரு மாத காலம் பிடித்தது.

மலான்சர்க்கார்எண்ணத்தில் மண் விழுகிறது!

இந்தியர்களை வெளியேற்றும் முயற்சியில் படுதோல்வி!

டர்பன்; டிச. 16—

தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியர்களை வெளியேற்ற வேண்டுமென்று சென்ற ஒரு ஆண்டுகாலமாக மலான் சர்க்கார் செய்து வரும் முயற்சி, படுதோல்வியில் முடிந்திருக்கிறது என்று இங்குள்ள ஒரு பிரபல பத்திரிகையில் அரசியல் நிருபர் எழுதுகிறார்.

மலான் சர்க்காருக்கு சோதனையாக ஒரு இந்தியர் வெளியேற்றப்பட்டால் 9 இந்தியர் மக்கள் தொகையில் அதிகரித்துவருகின்றனர்.

இந்தியாவுக்கு திரும்பிச் சென்றுவிடும் இந்தியர்களுக்கு போனஸ் இரட்டிப்பாகக் கொடுக்கப்படும் என்று, இவ்வாண்டு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது. இதன்படி பெரியவர்களுக்கு 40 ஷில்லிங்கும் குழந்தைகளுக்கு 20 ஷில்லிங்கும் கொடுக்கப்படுவதுடன் இலவசமாக பிரயாணம் செய்யவும் வசதிசெய்து தரப்படுமென அனுமதிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தை பயன்படுத்திக் கொண்ட 165 இந்தியர்களே முன்வந்தனர். இந்தியாவில் தாங்கள் பிறந்த இடத்திலேயே தங்கள் கடைசி காலத்தைத் தள்ள வேண்டுமென்று விரும்பியவர்களே இவர்களில் பெரும்பாலானவர்கள் மற்றவர்கள் வேலை கிடைக்காமல் மனம் வெறுத்துச் சென்றவர்கள்.

மலான் சர்க்காரின் எண்ணத்தில் மண் விழவேண்டும் என்று தானோ என்னவோ, இந்திய மக்கள் தொகை ஏகமாக அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது எவ்வளவு இந்தியர்கள் வெளியேற்றப்பட்டார்களோ அதைப்போல், நான்கு மடங்கு இந்தியப்பிறப்பு விகிதம் ஒரு மாதத்தில் டர்பன் நகரில் அதிகரித்திருக்கிறது.

இந்தியர்களை வெளியேற்றும் கொள்கையைத் தடுக்கும்படிச்செய்தவர் ஆப்பிரிக்கானீர் கட்சித் தலைவரும் நிதிமந்திரியுமான ஹாவெல்காவேதான் என்று "வெஸ்டர்ன் மெயில்" என்ற வெல்ஷ் பத்திரிகை கூறுகிறது. இக்கொள்கையொன்றே மலான் சர்க்காரைக் கவிழ்க்கப் போதும் என்று இப்பத்திரிகை எழுதுகிறது.

* * *

"பதவியிலிருந்து விலகுக"

இந்தியர்களை வெளியேற்றும் திட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தவில்லை என்றும், இதனால் படுதோல்வி ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆகவே டாக்டர் மலான் ராஜிநாமா செய்ய வேண்டும் என்றும் இரு கேப்டவுன் பத்திரிகைகள் கூறுகின்றன.

சர்க்கார் கொள்கையை அடியோடு மாற்றிவிட்டதற்கு நிதிமந்திரி ஹாவெங்காவே காரணம் என்று அப்பத்திரிகைகள் சொல்கின்றன.

சென்னை மாவட்ட தி. மு. க. மாநாடு

பெண்தொண்டர்கட்கு அறிக்கை

வருகிற ஜனவரி 15-ந் தேதி நடைபெறவிருக்கும் சென்னை மாவட்ட தி. மு. கழக மாநாட்டிலும், இரவு நாடகத்திலும் தொண்டாற்ற விருப்பமுள்ள பெண் தொண்டர்கள், கீழ்க்காணும் முகவரிக்கு எழுதியோ, நேரில் கண்டோ தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

A. அலமேலு,
பெண் தொண்டர் தலைவர்
18, அருணாசல ஆச்சாரி தெரு,
சேப்பாக்கம், சென்னை-1.

மதுரை மாவட்ட தி. மு. கழகங்களுக்கு

சென்ற 4-12-49-ந் தேதி சோழவந்தானில் நடந்த மாவட்ட செயற்குழு கூட்டத்தில், அநேக கிளைக்கழகங்கள் மாவட்ட கழகத்திற்கு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தன. அதுபோல் தேர்ந்தெடுக்காத கழகங்கள் கழகத்திற்கு இரண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பி கொடுக்க வேண்டுகிறேன். அத்துடன் அங்கத்தினர் புத்தகங்கள் வாங்கிச் சென்ற தோழர்கள் அங்கத்தினர்களைச் சேர்த்து 31-12-49-ந்தேதிக்குள் எனக்கு அனுப்பிவிக்க கேட்டுக்கொள்கிறேன். 1950 ஜனவரி முதல் தேதிக்குள் தலைமைக் கழகத்திற்கு கணக்கு அனுப்ப உதவியாகயிருக்கும்.

இப்படிக்கு
தா. ஆ. டையப்பன்
செயலாளர்
மதுரை மாவட்ட தி. மு. கழகம்.

தி. மு. வா. க. பொதுக் கூட்டம்

கொழும்பு, டிச. 15—

7 12-49ல் இல்குப்பனித்தெரு, வெக்சோல் வீதி, 76 நம்பர் இல்லத்தில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் சே. ரா. சடையமுத்து தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையில் தி. மு. க. கொள்கைகளையும், நாட்டின் நிலைமைப் பற்றியும் விரிவாகப்பேசினார்கள். அடுத்து பேசிய தோழர் மா. இளஞ்சோன் அவர்கள் திராவிடர்கள் யார்? என்னும் பொருள் பற்றி நீண்டநேரம் சொற்பொழிவு ஆற்றினார். அடுத்து தோழர்கள் மா. வே. தேவராசன், மு. தமிழ்மணி, சே. ரா. ராமசந்து முதலியோர் பேசினார்கள். பின்பு செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கலப்பு மணம்

விருதுநகர், டிச. 11—

விருதுநகரில் முனிசிபல் ஆபீஸ் ஷராப், தோழர் எம். எஸ். மாரியப்பன், அவர்களுக்கும், தோழியர் பி. ஜோதி அலிஸ் (ஆசிரியை கே. ஜி. உயர்தர ஆரம்ப பள்ளி) அவர்களுக்கும் மதுரை இராமநாதபுரம் மாவட்ட திருமணப் பதிவாளர் தோழர் டி. ஜே. சொர்ணவில் அவர்களால் 9-12-49ல் பதிவுத் திருமணம் நடத்திவைக்கப்பட்டது.

இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம்

20-12-49

கூடலூர் (மதுரை):— சி. பி சிற்றரசு, வே. தரைராசு.

கற்பது விஞ்ஞானம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சுபவேளை" என்று பார்த்து வேலையைத் துவககுகின்றனர். சுதந்தர பர்மாவுக்கு ஆட்சி மற்றம் செய்தபோது 'சுப வேளை' என்று பார்த்து, நள்ளிரவுக்குப்பின் அதனைச் செய்தனர். அப்படியிருந்தும் இன்றைய தினம் கரேன்களிடமும், கம்யூனிஸ்டுகளிடம் சிக்கிச் சீரழிகிறது பர்மா, இந்த நிலைமையிலிருந்து அந்த 'சுபவேளை'யால் பர்மாவை காப்பாற்ற முடியவில்லை. ஜோதிடத்தைப் பற்றி இப்பொழுது முடிவான தீர்ப்பு ஒன்றும் கூற நான் விரும்பவில்லை. அதனைச் சரிவர ஆராய்ந்து, புள்ளி விவரங்களோடு அதன் குட்டுகளை வெளிப்படுத்த வேண்டும். ஆனல் அப்படிப்பட்ட சோதனைக்கு ஜோதிடர்கள் இணங்கிவருவார்களா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது ஏனெனில் அத்தகைய சோதனையல் அவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படக்கூடு

எனக்கு இப்பொழுது ஒரு சம்பவம் நினைவுக்குவருகிறது; அதாவது சில ஆண்டுகளுக்கு முன்னர், காசியில் இந்திய கிரிகட் ஆட்டக்காரர்கள், வெள்நாட்டு கிரிகட் ஆட்டக்காரர்களுடன் போட்டியிட்டு வெற்றிபெற்றார்கள். இவ்வெற்றிக்குக் காரணம் கிரிக்கட் ஆடினவர்களுடைய திறமை காரணமல்லவென்றும், பந்தயத்தன்று காலையில் சில படித்த பண்டிதர்கள் பலியிடும் சடங்கு செய்ததே அதற்குக் காரணம் என்றும் பேசப்பட்டது.

இத்தகைய செயல்கள் மூட நம்பிக்கையின் காரணமா எங்கும் நடைபெறக் காண்கிறோம். இவை நகைப்புக்கிடந்தருவனவாக இருப்பினும் இதில் உள்நம்பிக்கை வைத்திருப்போரும் உளர். "இளமையும், நல்ல உடல் நிலையும் காதல் உண்டுபண்ணும் சக்தி வாய்ந்தவை" என்று வால்டைடர் சொன்னார். அதுபோல்நல்ல ஞாபகச் சக்தி கணித அறிவு, எதரியின் மனநிலை அறியும் தன்மை அகிய ... [illegible] ஜ்போன்ற சில ஆட்டங்களிலும் மற்ற பந்தயங்களிலும் வெற்றி பெற உதவி செய்யும் சக்திகளாகும் மந்திர சக்தியை இவற்றில் வெற்றி காணமுடியாது. பகுத்தறிவைப் பயன்படுத்திப் பழக்கப்பட்டவர்கள் எதற்கு கவலைப்பட தேவையில்லை. அப [illegible] வகை [illegible] த்த [illegible] பி [illegible] னையும் தா [illegible] ரீதி சகதி [illegible] கும் ச [illegible] யை [illegible].

ஜோதிட சில சமயங்களில் சரியாக இருக்கிறது, என்று சொல்லப்படுகிறது. அதை நாம் ஏற்றுக்கொள்ளுவதாக வைத்துக்கொண்டாலும், அதனை குறுக்கு விசாரணை செய்து பார்த்தால் அதுவும் பயனற்றதாகவே காணப்படும். "கப்பல் உடைபட்டபோது காப்பாற்றப்பட்ட பலர், தம் கடவுளர்களுக்கு அளித்த காணிக்கைகள் இதோ" என்று அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த பொருள்களைக் காட்டி சொன்னனும் ஒருவன். அதற்கு, அக்காட்சியைக் கண்டவன். "அப்படியானல், கடவுளை வேண்டியும் கப்பல் உடைபட்டு உயிரை இழந்தார்களே, அப்படிப் பட்டவர்களின் நினைவுச் சின்னங்களாக எழுப்பப் பட்ட கட்டிடங்கள் எங்கே?" என்று கேட்டானும், இது ஒரு கிரேக்க நாட்டுக்கதை. இப்படியெல்லாமிருந்தும் அநேகர் பகுத்தறிவைப் பெற மனமில்லாமலிருக்கின்றனர். பண்டைக்காலத்திலிருந்து பகுத்தறிவின் பயனை விளக்க பல எடுத்துக்காட்டுகள் தரப்பட்டு வந்ததினலேயே மூட நம்பிக்கைகள் ஓரளவுக்குக் குறைந்திருக்கக் காண்கிறோம். எனவே, படிசவர்களும், வாலிபர்களும் இளைஞர்களுடைய உள்ள திலமூடநம்பிக்கைகள் இடம்பெருமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தொடரும்

வைரங்களுக்கு ரேஷன்!

லண்டன், டிச. 18—

வைரங்களுக்கு உலகமெங்கும் ஏகோகிராக்கியிருப்பதால், அதை விற்க ரேஷன் முறையை ஹாட்டன் கார்டன் வைர வியாபாரிகள் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

100 000 பவுன் மதிப்புள்ள வைரங்களே வாங்க விரும்புபவர்கள், இனி 10 000 பவுன் முதல் 20,000 பவுன் மதிப்புள்ள வைரங்களையே தான் வாங்க முடியும்.

நாணய மதிப்புக் குறைவால் வைரங்களின் விலை முன்பு இருந்ததைவிட அரை மடங்கு அதிகரித்திருக்கிறது. —ரூனேப்

பிரிட்டனுக்கு இந்தியத் தேயிலை

லண்டன், டிச. 18—

பிரிட்டிஷ்சர்க்கார் சொந்தமாக தேயிலையைவாங்குவது 1950 டிசம்பர் மாதம் என்றும் தேயிலை மார்க்கெட் 51-ல் தான் திறக்கப்படலாம் என்றும் இங்குள்ள வட்டாரங்களில் [illegible] 30[illegible],000 00 [illegible] 288 000 00 பவுண்டு [illegible] [illegible] பிரிட்டன் கேட்ட 30 லக்ஷ பவுண்டு சேர்லையை இந்தியா அனுமதிட்டது.

தூத்துக்குடியில் நாடகங்கள்

திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக

டிசம்பர் 24, 25 தேதிகளில்

நடிப்புப் புலவர் K R ராமசாமி, அறிஞர் C N. அண்ணுத்துரை ஆகியோர் நடிக்கும்

'சந்திரமோகன்'

'நீதிதேவன் மயக்கம்'

நாடகங்கள் நடைபெறும்

நாடகக் குழுவினர், தூத்துக்குடி.

விவரம் வேண்டுவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவும்:—

செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம் நகரக் கிளை, தூத்துக்குடி.

நாடக காரியமாக தோழர் க. வி. கே. சாமி அவர்கள் கீழ் கண்ட இடங்களுக்கு நன்கொடை வசூலிக்கச் செல்லுவர்.

19—12—19 திங்கள் திராவிட முன்னேற்றக் கழகம். கோவில்பட்டி.

20—12—49 செவ்வாய் "காந்தி லாட்ஜ்" திருநெல்வேலி ஜங்ஷன்

சுற்றுவட்டாரத்திலுள்ள தோழர்கள் ஷை ஊர்களுக்குச் சென்று நாடகங்கள் பற்றி விவரங்கள் தெரிந்து, நன்கொடை டிக்கட்டுகள் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர், நாடகக் குழு.

மூன்றுவது உலகப் போர் மூளாது!

ஏதென்ஸ், டிச. 18—

ருஷ்யாவுக்கும் மேற்கு நாடுகளுக்கு மிடையேயுள்ள தகராறின் விளைவாக, மூன்றுவது உலகப் போர் எதுவும் இப்பொழுது மூளாது என்றேதான் என்று கிரேக்க தளபதி பீல்ட்மார்ஷல்பாபகோஸ் செய்தி பத்திரிக்கைகளின் நிருபரிடம் கூறியிருக்கிறார்.

இப்பொழுது மேற்கு நாடுகள் கடைபிடித்துவரும் கொள்கையை விடாமல் பின்பற்றுவதன் மூலமே, போர் ஏற்படாமல் செய்யமுடியும் என்று தான் கருதுவதாக அவர் கூறினர்.

ஆஸ்திரேலிய தொழிற்கட்சி கொள்கை

ஸிட்னி, டிச. 15—

ஆஸ்திரேலியத் தேர்தலில் தோல்வியடைந்த தொழிற்கட்சி தன் புதுக்கொள்கை ஜனவரியில் [illegible] [illegible] தெரிகிறது, எதிலும் படாத நடுநிலைமைக் கொள்கையை வகுக்க வேண்டும் என்று செஜரிட்டி மெம்பர்கள் விரும்புகிறர்களாம்

போகிற போக்கில்...!

'கள்ளமார்க்கெட்காரர்களுக்கு தூக்கு அல்லது ஜன்ம தண்டனை விதிக்க வேண்டுமென்ற மசோதாவை டெல்லி பார்லிமென்டில் கே டி. ஷா கொண்டுவந்தார்'

—செய்தி

இவரென்ன கிணற்றுத் தவளையாயிருக்கிறார்! சர்க்காருடைய கொள்கையே இதுதானே! நம் நேருஜியே இதனைப் பல தடவைக் கூறியிருக்கிறாரே! இதற்கெனத் தனி மசோதா எதற்கு? சர்க்காரிடமே விட்டு விடுங்கள், அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் கள்ள மார்க்கெட்காரர்களை! கே. டி. ஷா. வுக்கு ஒரு எச்சரிக்கை! கள்ளமார்க்கெட் காரர் என்று இன்னொரு தரம் சொல்ல வேண்டாம்! அந்தப் புண்ணியாத்மாக்கள் பற்றிப் பேசவேண்டுமானல், இரகசிய லாபக்காரர் என்று சொல்லுங்கள் ஆமாம்!

* * *

"சாதுக்கள் சன்னியாசிகள் என்போருக்கும், சாதாரண பிச்சைக்காரர்களுக்கும் எந்த வித்தியாசத்தையும் பாவிக்காமல், இவர்களெல்லோரையுமே ஒரே மாதிரியாகவே பம்பாய் சர்க்கார் பாவிக்கும்"

—செய்தி

'இறைவனே தொண்டர் தம் உள்ளத்து ஒடுக்கம்; 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'!

* * *

"கும்பகோணம் கணபதி சாஸ்திரி கொலைவழக்கு சம்பந்தமான சர்க்கார் தரப்பு அப்பீல் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது"

—செய்தி

இந்த சந்தர்ப்பத்தில் உடையார் பாளையம் வேலாயுதம் கொலை வழக்கின் ஞாபகம் வருகிறதென்கிறர், ஒரு நீதி விரும்பி!

* * *

ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதாவை இப்போது கொண்டு வராமலிருந்தால் நன்றாயிருக்கும்"

—ஆர். எஸ். எஸ். கோல்வால்கர்

தான் கனவு காணும் இந்து சாம்ராஜ்யத்தில கொண்டு வந்து விடலாமென்று இட்டம் போட்டிருக்குமோ குருஜி!

* * *

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, ஸ்ரீரங்கம் செல்வோர் 'இனகுலேஷன்' (காலரா தடுப்பு ஊசி) குத்திக்கொண்டு ஒருவாரம் பொறுத்துத்தான் அவ்வூரில் நுழைய வேண்டுமென சுகாதார டைரெக்டர் கட்டளை பிறப்பித்துள்ளார்! ஊசி குத்திக் கொண்டதற்கு 'சர்டிபிகேட்' காட்டினல்தான் நகரினுள் விடப்படுவராம்

—செய்தி

சுகாதார இலாகா டைரெக்டரின் இவ்வுத்திரவு, பள்ளி கொண்டிருக்கும் எம்மான் ஸ்ரீ ரங்கபெருமாளை அவமானப் படுத்துவதாகதா என்று சீறுகிறர் ஸ்ரீமான் மார்கழித் திங்கள்! பெருமான் துயல்களைந்ததும்மான நஷ்ட வழக்கு தாக்கல் செய்தால், தன் மீது கோபித்துக் கொள்ளக்கூடாதென்றார் உயர் திரு. அனந்த சயனம்.

NATIONAL CALL

(நேஷனல் கால்)

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து வெளிவரும் ஆங்கில வார இதழ்

தனிப் பிரதி 0—2—0

ஆண்டு சந்தா 6-0-0

முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு:— பொறுப்பாளர் நேஷனல் கால், சென்னை - 17.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்கண்ட ஊர்களுக்கு 'மாலை மணி' விற்பனைசெய்ய முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை :—

காட்டுமன்னார்கோவில்	
பொன்னமராவதி	
திருமுருகன்றம்	
சுபதிகோயில்	காரைக்கால்
மதுரை	தச்சநல்லூர்
வடிப்பட்டி	சங்கரிட்டிரக்
மானங்குடி	வேலூர்
உதகை	ஈங்கூர்
தேனி	முசிரி

விலாசம் : "மாலை மணி" சென்னை.

கடைசி சந்தர்ப்பம்

குறித்துவையுங்கள்

சென்னை ஒற்றைவாடையில்

டி. கே. எஸ். சகோதரர்களின் மகத்தான நாடகங்கள்

1-1 50 ஞாயிறு வரை

'இமயத்தில் நாம்'

By, ஏ வெங்கடாசலம்

31 12-49

வைகுண்ட ஏகாதசிக்காக ஸ்பெஷல் புரோகிராம்

சம்பூர்ண இராமாயணம்

(இரவு 9-15முதல்விடியல்4-30வரை)

[ஜனவரி 2 முதல் 8 வரை காங்கிரஸ் பொருட் காட்சி மைதானத்தில் T. K S. நாடகங்கள் நடைபெறுவதால் ஒற்றைவாடையில் நாடகம் நடைபெருது.]

11—1—50 மாலை காட்சி

மனோஹரா

By, P. சம்பந்த முதலியார்

(காங்கிஜீ ஞாபகார்த ஸ்தூபி நிதிக்காக)

12—1—50 முதல் தினசரி

மனிதன்

By. ஆதிசந்தரன்

N. B:—28—2—50 உடன் நாடகம் நடத்திவிட்டு அத்துடன் T K. S. கம்பெனி தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது.

பிரெஞ்சு-போலீஸ் அரசியல்உறவுமுறியும்?

பாரிஸ், டிச. 15—

இப்போழுதுள்ள நிலைமை நீடித்தால் பிரெஞ்சு போலீஸ் ராஜீய உறவு முறிந்துவிடலாம் என்று, இங்குள்ள ராஜீய வட்டாரங்களில் கூறப்படுகின்றன.

மேற்கு நாடுகளுடன் சௌஜன்ய அரசியல் உறவை கொண்டிருக்க முடியாதபடி போலந்தை ரஷ்யா நிர்பந்தப் படுத்தி வருகிறது என்று சொல்லப்படுகிறது;

ராஜீய உறவு முறிய வேண்டியதே ரஷ்யாவின் நோக்கம் என்றும், முடிந்த வரையில் ரஷ்யாவின் எண்ணம் ஈடேறுவதை செய்யவே தாங்கள் முயன்று வருவதாகவும், ஒரு பிரெஞ்சு அதிகாரி கூறினர். (ரூேளா.)

ரஷ்யாவில் ஜெர்மன் போர்க் கைதிகள்

பான், டிச. 15—

குறைந்தது 200,000 ஜெர்மன் போர்க் கைதிகள் இன்னும் ரஷ்யாவிலிருந்து வருகின்றனர் என்றும், இவர்கள் தங்கள் குடும்பத்தினரிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தனியாக வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அகதிகள் விவகார மந்திரி இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

கம்யூனிஸ்டு நாடுகள் நிர்வாகம்பற்றி ஸ்டாலின் அக்கரை!

ஸ்டாலின் 1954-ம் ஆண்டிற்குள் பதவியிலிருந்து விலகிவிடுவார் என்று நிச்சயமாகத் தெரிகிறது என்று ருேளாப் நிருபர் கூறுகிறார்.

அவரே அயல் நாட்டு ராஜதந்திரிகள் சிலரிடம், தான் தினமுமே வேலை நேரத்தைக் குறைத்துக் கொண்டு வருவதாகவும் கிரிமியாவுக்கு ஒய்வுக்காகதான் விலகு முன்பே கம்யூனிஸ்டு நிர்வாகம் பலவீன படையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே தன் நோக்கம் என்றும் கூறியதாக கெம்ஸலி பத்திரிகைகள் நிருபர் கூறியதாக கெம்ஸலி பத்திரிகைகள் நிருபர் கூறுகிறார்.

அடல்நாடுகளின் சர்க்கார் நிர்வாகங்கள் நம்பிக்கையான கம்யூனிஸ்டுகள் வசம் இருக்க வேண்டும் என்றே ஸ்டாலின் விரும்புவதாகத் தெரிகிறது. ஸ்டாலினின் வாரிசுகள் நிர்வாக இயந்திரத்தைப் பலப்படுத்த இப்பொழுதே ஈடுபட்டு விட்டனர்.

இலங்கைக்கு அனுமதிச்சீட்டு வழங்குவதில் ஊழல்

இலங்கையில் இந்திய ஹைகமிஷனரின் முதல் காரியதரிசியாக உள்ள என். இ. எஸ். ராகவாச்சாரி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் இலங்கையிலிருந்து இந்தியா சென்றுவிட்டு இலங்கைக்கு செல்லும் இந்தியர்களில் பலர், இங்கு தங்களுக்கு வேலை இருக்கிறதென்று மண்டபம் ஸ்டேஷனில் அத்தாட்சி காட்டிய போதிலும் தங்கள் கிராம அதிகாரிகளிடமிருந்தோ அல்லது இலங்கை ரெவின்யூ அதிகாரிகளிடமிருந்தோ அத்தாட்சி பத்திரங்கள் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தப்படுவதாக குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை திரும்பும் இந்தியர்கள் 1949 நவம்பர் முதல் தேதிக்கு முன், ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக இலங்கையில் வசித்தனர் என்பதற்கான அத்தாட்சியைக் காட்டவேண்டும் இல்லையேல், அவர்களுக்கு இலங்கையில் வசிக்க அனுமதி அளிக்கப்படுவதில்லை. இதனால் வருடம் சுமார் 70 அல்லது 80 சதவிகித விதம் இலங்கையை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் மீண்டும் இலங்கை திரும்புவது மிகவும் கஷ்டமாக இருக்கும் ருேளாப்

இனி அமெரிக்க கோதுமை இறக்குமதி இல்லை

அமெரிக்காவிலிருந்து இவ்வாண்டு ஜூலை மாதம் வரையில் 3,44,000 டன் கோதுமை இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது என்றும், மேற்கொண்டு கோதுமை வரவழைக்கும் உத்தேசமில்லையென்றும் அண்மையில் பார்லிமெண்டில் பேசிய போது உணவு மந்திரி தோழர் ஜெயராம்தாஸ் தௌலத்ராம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இவ்வாண்டு உணவு உற்பத்தி முயற்சியின் மூலம், மேற்கொண்டு 28 லட்சம் டன் உணவுப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டு சேர்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையும் மதுவிலக்கும்

இலங்கையில் மதுவிலக்கு ஏற்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்கிற விஷயம் இலங்கை மந்திரிசபையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சீக்கிரமே அதன் முடிவு தெரியலாம் எனத் தெரிகிறது.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலிய வைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணு ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை

வானொலி

(20-12-49 செவ்வாய்க்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 கே. ஜி. சிவன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-50 மேனகா, சரளா—பாட்டு

பிற்பகல்:

12-30 கலாசாலைப் பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 குழல்வகை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 எம். சந்திரசேகரன் வயலின்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி—பாட்டு

இரவு:

7-00 கே. பி. ராமகிருஷ்ணன்—பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 நாலவகை - (இசைத்தட்டு)
7-45 திருச்சியில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 முன்பனி—நாடகம்
9-30 கே. ஆர். எஸ். மணி ஐயர்—பாட்டு
10-00 வாத்ய இசை (இ. த.)
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சி. சே. பாலுகுட்டி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 குழல்வகை (இசைத்தட்டு)
8-50 எஸ். சுப்பையா பிள்ளை—புல்லாங்குழல்

பிற்பகல்:

12-30 கலாசாலைப் பள்ளிகளுக்கு
1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 எஸ். சுப்பையா பிள்ளை—புல்லாங்குழல்
2-00 தமிழில் செய்திகள்
2-10 கோட்டு வாத்யம் (இ. த)
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 சி. கே. வேலுகுட்டி நாயர்—பாட்டு
5-40 இசைப்பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 ஆர். திருஞானசம்பந்தம்—பேச்சு
7-45 எஸ். சோமசுந்தரம்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 அ. இ. ரே. நிகழ்ச்சிகள்
9-35 நீங்கள் கேட்டவை
10-00 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.